**தலைப்பு 149 – கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கை**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் மூன்றாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்று என்பன கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சினால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

## 1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிதன்மை தொடர்பான பொறுப்பு

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை செய்தல் தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப் பிரமாணம் 124(2) இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டுள்ளார். நிதிப் பிரமாணம் 125(1)(அ) இன் பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடுதல், செயற்படுத்துதல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.3 கணக்காய்வின் நோக்கெல்லை

---

தலைப்பு 149 – கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை வழங்குதல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 ஆகஸ்ட் 17 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும்,

செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.4 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 127 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றுகையில் வெளிப்படுத்தப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட்டு பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிப்பொறுப்பை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளார் என்பது அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் 127 இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிதன்மை | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் அந்த ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|---|
| **நிதிப்பிரமாணம்** | | | |
| 127(1)(ஆ) | செலவினம் மற்றும் அரச வருமான சேகரிப்பு தொடர்பாக போதியளவு கட்டுப்பாட்டிற்கு ஒழுங்கு விதிகளை ஏற்படுத்தும் முறையொன்று தயாரித்துக் கொள்ளப்படல் வேண்டும். | இணங்காமைகள் | 2.4 |
| 127(2) | தமது நிர்வாகத்தின் கீழ் காணப்படும் திணைக்களங்களில் அப்போது இருக்கும் செலவின விடயங்கள் உட்பட புதிதாக அல்லது கூடுதலாக செலவு செய்வதற்கான முன்மொழிவுகள் சிக்கனமாகவும் செயற்திறனான வகையிலும் அமைச்சின் பரிசீலனைக்கு உட்படுத்தல். | 1. செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துவதிலுள்ள தாமதங்கள் | 2.1.1 (அ) |
| | | 2. பணத்தை விடுவித்திருந்த போதிலும் செயன்முன்னேற்றமில்லாத செயற்திட்டங்கள் | 2.1.1 (ஆ) |

| | | | |
|---|---|---|---|
| 127(4) | தமது ஒவ்வொரு கணக்கீட்டு உத்தியோகத்தரால் ஒதுக்கீட்டுக் கணக்குகள் முறையாக சமர்ப்பிக்கப்படுவதாகவும் தாம் அனுப்பி கையொப்பமிடுவதற்கு முன்னர் அமைச்சினால் பரீட்சிக்கப்பட்டதெனவும் அவ்வாறே மதிப்பீடுகளில் நிதி ஏற்பாடு மற்றும் உள்ளவாறான செலவினத்திற்கு இடையே காணப்படும் கருத்திற் கொள்ளக் கூடியளவு வேறுபாடு தம்மால் அழுத்தமாக புலனாய்விற்கு உட்படுத்தப்படுதல். | வருடாந்த செயலாற்றல் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படாமை | 2.1.2 |
| 127(5) | திணைக்களத்தின் மதிப்பீடுகளில் நிதி ஏற்பாடு மற்றும் செலவினத்திற்கு இடையே உள்ள கருத்திற்கொள்ளக் கூடியளவு வேறுபாடு அமைச்சினால் நுட்பமாக புலனாய்விற்கு உட்படுத்தப்பட்டதாகவும். | 1. ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடுகள் பயன்படுத்தப்படாமை<br>2. மிகை நிதி ஏற்பாட்டை ஒதுக்கீடு செய்தல் | 2.2(அ)<br>2.2(ஆ) |
| 127(6) | கணக்கீட்டு உத்தியோகத்தர்களின் பொறுப்பிற்கு வெளியே காணப்பட்ட வருமானம் அல்லது அரசிற்கு கிடைக்க வேண்டிய ஏனைய கட்டணங்கள் சேகரிக்கும் செயற்பாடுகளை கூடுதல் கவனத்துடன் செயற்பாட்டு அமைச்சின் பரிசோதனைக்கு உட்படுத்துதல் | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கில் குறிப்பிடப்பட்ட குறைபாடுகள் | 2.3 |

## 2. பொருன்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றல்

#### 2.1.1 செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமை

**(அ) செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துவதில் தாமதங்கள்**

அமைச்சினால் பின்வரும் செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துவதில் தாமதங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்யப்படுவதற்கு திட்டமிடப்பட்ட 09 கைத்தொழில் பேட்டைகளை நிர்மாணிப்பதற்காக ரூபா 292.40 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் உரிய செயற்பாடுகள் 2017 திசெம்பர் 31 வரையிலும் பூர்த்தி செய்யப்பட முடியாதிருந்தன.

(ii) மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்யப்பட வேண்டிய 02 செயற்திட்டங்களிற்காக ரூபா 67.94 மில்லியன் நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது அவ்வாறான தொகை எதுவும் செலவிடப்பட்டிருக்கவில்லை. மேலும் இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

- கைத்தொழில் பேட்டையை நிர்மாணிப்பதற்காக உரிய காணி தொடர்பாக தெளிவான உடன்படிக்கையொன்றை கைச்சாத்திட்டிருக்காத போதிலும் 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 34.5 மில்லியன் தொகை கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காவும் 2016 ஆம் ஆண்டின் போது உட்கட்டமைப்பு வசதிகளிற்காக ரூபா 132.60 மில்லியன் தொகையும் ஒப்பந்ததாரர்களிற்கு செலுத்தப்பட்டிருந்ததுடன் 2017 ஆம் ஆண்டிலும் மேற்படி செயற்திட்டத்திற்காக ரூபா 67.94 மில்லியன் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

- மேலும், செயற்திட்டத்திற்கான மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 253 மில்லியன் தொகையானதுடன் செயற்திட்டத்திற்கு உரிய காணி தொடர்பாக சச்சரவு நிலைமையொன்று காணப்படுகின்ற போது 2017 திசெம்பர் 31 வரை அதில் ரூபா 167.1 மில்லியன் தொகை அதாவது மொத்த மதிப்பிடப்பட்ட கிரயத்தின் 66 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அண்ணளவான தொகை ஒப்பந்ததாரர்களிற்கு செலுத்தப்பட்டிருந்தது.

**(ஆ) பணத்தை விடுவித்திருந்த போதிலும் செயன்முன்னேற்றமில்லாத செயற்திட்டங்கள்**

கைத்தொழில் பேட்டைகளின் நிர்மாணம் தொடர்பான 03 செயற்திட்டங்களிற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 9.54 மில்லியன் செலவினம் ஏற்பட்டிருந்த போதிலும் அதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.1.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

2002 செப்தெம்பர் 12 ஆம் திகதிய 402 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சினால் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டிய போதிலும் அந்த அறிக்கை 2018 ஆகஸ்ட் 17 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2 செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல்**

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த 05 ஆண்டுகள் காலப்பகுதியின் போது அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடு, பயன்பாடு மற்றும் சேமிப்பு தொடர்பான தகவல்களும் அவை தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்களும் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | செலவின வகை | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| 2013 | மீண்டெழுபவை | 596.89 | 566.42 | 30.47 | 5 |
| | மூலதனம் | 1,686.80 | 781.26 | 905.54 | 54 |
| | **மொத்தம்** | **2,283.69** | **1,347.68** | **936.01** | **41** |
| 2014 | மீண்டெழுபவை | 739.78 | 714.94 | 24.84 | 3 |
| | மூலதனம் | 1,861.29 | 1,649.87 | 211.42 | 11 |
| | **மொத்தம்** | **2,601.07** | **2,364.81** | **236.26** | **9** |
| 2015 | மீண்டெழுபவை | 1,804.16 | 1,691.16 | 113.00 | 6 |
| | மூலதனம் | 3,681.53 | 2,414.51 | 1,267.02 | 34 |
| | **மொத்தம்** | **5,485.69** | **4,105.66** | **1,380.02** | **25** |
| 2016 | மீண்டெழுபவை | 1,970.17 | 1,773.48 | 196.69 | 10 |
| | மூலதனம் | 7,465.34 | 6,422.09 | 1,043.25 | 14 |
| | **மொத்தம்** | **9,435.51** | **8,195.57** | **1,239.94** | **13** |
| 2017 | மீண்டெழுபவை | 2,419.58 | 1,971.68 | 447.90 | 19 |
| | மூலதனம் | 12,073.90 | 7,099.97 | 4,973.93 | 41 |
| | **மொத்தம்** | **14,493.48** | **9,071.65** | **5,421.83** | **37** |

மீளாய்வாண்டு தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகள் பயன்படுத்தப்படாமை**

07 மூலதன செலவின விடயங்களிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 1,478 மில்லியன் தொகையான மற்றும் 05 மீண்டெழும் செலவின விடயங்களிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 340 மில்லியன் தொகையான நிதியேற்பாடுகள் முழுமையாகச் சேமிக்கப்பட்டிருந்தன.

**(ஆ) மிகை நிதி ஏற்பாட்டை மேற்கொள்ளுதல்**

19 மீண்டெழும் செலவின விடயங்களிற்காக ரூபா 52.1 மில்லியன் தொகையும் 27 மூலதன செலவின விடயங்களிற்காக ரூபா 2,422.7 மில்லியன் தொகையுமாக ரூபா 2,474.8 மில்லியன் கூட்டுத்தொகையான மிகை நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததன் காரணமாக நிதி ஏற்பாட்டை பயன்படுத்திய பின்னர் சேமிப்பானது அச் செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டில் 31 சதவீதம் தொடக்கம் 98 சதவீதம் வரையான வீச்சிலான அளவில் காணப்பட்டது.

**(இ) குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீடுகளின் மூலம் நிதி ஏற்பாடுகளை வழங்குதல்**

03 மூலதன செலவின விடயங்களிற்காக குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 154.5 மில்லியன் நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

## 2.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

### பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்

அமைச்சிற்குரிய 14901 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளபடியான பெறுமதிகளும் கீழே தரப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக்கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக்குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக்கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 27 | 25.29 | 13 | 16.45 | 75 | 59.18 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### நிலுவையாக இருந்த கடன் மீதிகள் அறவீடு செய்யப்படாமை

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணைக்கக் கூற்றின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளது கூட்டுத்தொகை ரூபா 100,208 ஆக இருந்ததுடன் அந் நிலுவை மீதிகள் 08 ஆண்டுகள் தொடக்கம் இருந்து வந்த போதிலும் அந் நிலுவை கடன் மீதிகளை அறவிடுவதற்ககு அமைச்சு தவறியிருந்தது

## 2.4 இணங்காமைகள்

### நிதிப்பிரமாணங்களுடனான இணங்காமை

நிதிப்பிரமாணம் 103(1)(அ) இன் பிரகாரம் நட்டங்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிக்கையிடப்பட வேண்டிய போதிலும் 2017 ஆம் ஆண்டின் போது கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட 15 மோட்டார் வாகன விபத்துக்கள் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.5 மனித வளங்கள் முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளபடியான பதவியணியினர் மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்

அமைச்சின் கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட, உள்ளபடியான மற்றும் வெற்றிடமான பதவியணியினர் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுகின்றன. மீளாய்வாண்டிற்காக அமைச்சினால் ஆளணி வேதன செலவுத் தொகுதி தொடர்பாக ரூபா 345.23 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 72 | 51 | 21 |
| (ii) | மூன்றாம் நிலை | 07 | 06 | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 680 | 545 | 135 |
| (iv) | ஆரம்ப நிலை | 134 | 116 | 18 |
| (v) | அமையம்/ ஒப்பந்தம்/ ஏனையவை | 01 | 01 | - |
| | **மொத்தம்** | 894 | 719 | 175 |